PMM

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

12 - ஆம் வகுப்பு

## பொது தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14X1 = 14

1. 'மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இல்லாத தமிழ்' – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்
அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை
இ) அடி எதுகை, சீர்மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை

2. **பொருந்தா இணையைத் தேர்க.**
அ) தம்பி நெல்லையுருப்பருக்கு - 1) பாரதியார்
ஆ) முதல் கல் - 2) உத்தமசோழன்
இ) உரிமைத் தாகம் - 3) பூமணி
ஈ) தலைக்குளம் - 4) முகமது பாட்ஷா

3. மார்கழி என்பது .......... விழாவிற்குப் பெயர் பெற்றது.
அ) கடலாட்டு விழா ஆ) ஓணம் விழா
இ) திருவாதிரை விழா ஈ) தைப்பூச விழா

4. 'உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

6. ஆர்ப்பரிக்கும் கடல்/அதன் அடித்தளம்/மௌனம், மகா மௌனம் – அடிகள் புலப்படுவது
அ) இரைச்சல் ஆ) குறை குடம் கூத்தாடும்
இ) நிறை குடம் நீர்த் தழும்பல் இல் ஈ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது

7. 'ஏழாண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னர்க்குக் காட்டல்" - தொடர்களில் வெளிப்படும் செய்திகள்
1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்
அ) 1 சரி, 2 தவறு ஆ) 1 தவறு 2 சரி இ) 1 தவறு 2 தவறு ஈ) 1 சரி 2 சரி

8. தமிழ்நதியின் படைப்புகளுள் ஒன்று
அ) டாலர் தேசம் ஆ) ஊருக்குள் ஒரு புரட்சி
இ) தண்ணீர் தேசம் ஈ) கைவிடப்பட்ட தேசம்

9. அல்லல் படுப்பதூம் இல் – எவரோடு பழகினால்?
அ) வாள் போல் பகைவர் ஆ) மெய்ப்பொருள் காண்பவர்
இ) எண்ணியாங்கு எய்துபவர் ஈ) தீயினத்தார்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

10. ஆராய்ந்து சொல்கிறவர்

அ) அரசர் ஆ) சொல்லியபடி செய்பவர் இ) தூதுவர் ஈ) உறவினர்

11. தமிழில் திணைப்பாகுபாடு ........ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

12. ஐம்பெருங் காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்

அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர்

இ) ஆறுமுகநாவலர் ஈ) இளம்பூரணர்

13. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது.

அ) குறியீடு ஆ) படிமம் இ) அங்கதம் ஈ) தொன்மம்

14. முதல் கல் சிறுகதையின் ஆசிரியர்

அ) புதுமைப்பித்தன் ஆ) உத்தமசோழன் இ) ஜானகிராமன் ஈ) சுஜாதா

## பகுதி - II - பிரிவு -1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

16. 'எத்திசையிலும் சோரு தட்டாது கிட்டும்' யார்க்கு?

17. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

18. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு வரை.

20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

21. பின்னணி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும், சான்று தருக.

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) தொழுதனர் ஆ) கலங்கி

23. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.** அ) வந்தவர் ஆ) வாழிய

24. பேசு - என்ற வேர்ச்சொல்லை வினைமுற்றாக்கி, வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

25. ***உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.***

மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும் தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

26. ***தொடர்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.***

1) நெர்பயிர்கள் மழைநீரில் மூள்கின.

27. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.***

1) நிலத்தக் கொளறனுமடா அப்பதான் வகுறு நிறையும்.

2) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான

28. ***பிறமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக.***

அ) சர்க்கார் ஆ) சம்பளம்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

29. **பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க.**
1) ஊண், ஊன்

30. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
அ) தலைக்கோல் ஆ) செந்தமிழே

**பகுதி – III (பிரிவு – 1)**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

31. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.
32. 'மூன்றாம் காலம் போல் ஒன்று' எவை, ஏன் விளக்குக.
33. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையை திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
34. எங்கிருந்தோ வருகிறது வண்ணத்துப் பூச்சியொன்று பறவைகளும் வரக் கூடும் நாளை – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

35. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.
36. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்? விளக்குக.
37. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.
38. உங்கள் குடும்பத்தின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.

**பிரிவு – 3**

SS PRITHVI

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 X 4 = 12

39. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. *(அல்லது)*
ஏகதேச உருவக அணியை விளக்குக.

40. **பா நயம் பாராட்டல். (திரண்ட கருத்து, மையக்கருத்து, ஏற்புடைய நயங்கள் மூன்று அமைக்க)**

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
    பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும் ;
சாலைகளில் பல தொழிலும் பெருக வேண்டும் ;
    சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலை உடை கதருடையாய்த் திகழ வேண்டும்
    தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்.
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
    வெற்றியின் மேல் வெற்றி எமக் கெய்த வேண்டும் – கவிமணி

41. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்கு. *(அல்லது)*
ஆ) கூதிர்ப் பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.

42. **பின்வரும் பழமொழிகளில் ஏதேனும் ஒன்றினை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை. *(அல்லது)* திணை விதைத்தவன் திணை அறுப்பான்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

43. **எவையேனும் நான்கனுக்கு தமிழாக்கம் தருக.**

1) A new language is a new life.
2) Knowledge of language is the doorway to wisdom
3) The limits of my language are the limits of my world.
4) Learning is a treasure that will follow its owner every where.
5) If you people to understand you, speak their language.

**காதுகேளாதோர்க்கான வினா. கீழுள்ள பத்தியைப் படித்து விடையளிக்கவும்.**

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை, மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது. மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும் மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர். மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்பவரும் மக்களே.

– மொழி வரலாறு (மு.வரதராசனார்)

**வினாக்கள் :**

1) மக்கள் படைத்துக் காத்து வரும் அரிய கலை எது? அது ஆற்றும் செயல் யாது?
2) தாயின் முதல் விருப்பம் என்ன?
3) மொழி வளர்ச்சி எதனோடு தொடர்புடையது?
4) மொழியை வளர்ப்பவரும், வளர்பவரும் யார்?

SS PRITHVI
www.Padasalai.Net

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 X 6 = 18

44. அ) பண்பின் படிமமாக படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

***(அல்லது)***

ஆ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி, விளக்குக.

***(அல்லது)***

ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

46. அ) கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக.

***(அல்லது)***

ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6

அ) "காய்நெல் அறுத்து ......" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'மிகும்' என முடியும் குறளை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com